# ௧

# சிலுவையிலிருந்து வரும் சுவிசேஷம்

The Gospel from Golgotha

***முகவுரை***

''சுவிசேஷம்'' — Gr. ***இவாஞ்சலியான்*** = நல்ல செய்தி
— மூலப்பதம் = "Godspell"
= கடவுளைப் பற்றிய செய்தி

நீர்த்துப்போகச் செய்தலும் கலப்படமும் இன்று சகஜம்.

அது ''வேறே சுவிசேஷம்''

— *கிறிஸ்துவின் ''சிலுவைக்குப்'' பகைவர்*
(பிலி 3:18,19)

பொருளாதாரத்தை முக்கியத்துவப்படுத்தும் சுவிசேஷம்.
வளவாழ்வு உபதேசம் — *''வயிறு ... பூமிக்கடுத்தவை''*
சுகபோக வாழ்வை வாக்களிக்கும் சுவிசேஷம்.

எனவேதான் —

சுவிசேஷத்தைப் பவுல் அழைக்கும் விதம்:
***''சிலுவையைப்** பற்றிய உபதேசம்''* (1 கொரி 1:18)

அவர் சொன்னது,
***''சிலுவையிலறையப்பட்ட** கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்''*
(வச 23)

அத்துடன் சொன்னது,
*''கிறிஸ்துவை, **சிலுவையிலறையப்பட்ட** அவரையேயன்றி,
வேறெதையும் பிரசங்கிப்பதில்லை''* (2:2)

சிலுவையிலிருந்து கிறிஸ்து பேசியவை
சுவிசேஷத்தின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கும் —
அதைச் ''சிலுவையிலிருந்து வரும் சுவிசேஷம்'' என்றழைக்கிறேன்.

***சிலுவையிலிருந்து வரும் சுவிசேஷமானது —***

***1. மன்னிப்பின் செய்தி*** (A Message of Forgiveness)

*''பிதாவே, இவர்களுக்கு மன்னியும்; தாங்கள் செய்வது இன்னதென்று
அறியாதிருக்கிறார்களே''* (லூக் 23:34)



- இதைத்தான் தமது சீடர்கள் பிரசங்கிக்க இயேசு விரும்பினார்:
*''மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எல்லா நாட்டினருக்கும் ...''*
(லூக் 24:47)

- கடவுளது மன்னிப்பு நிகரற்றது —
— அவர் பாவியை மன்னிக்கிறார்;
பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிடுகின்றன!
பாவிகளாயிருப்பதாலேயே பாவம் செய்கிறோம்;
பாவம் செய்வதால் பாவிகள் அல்ல.

பாவ சுபாவம் — வேர்; பாவங்கள் — கனி
(காரணம்) (விளைவு)

எ.கா.) பாவ அறிக்கை முடிவடையுமுன் கெட்ட குமாரன்
மன்னிக்கப்பட்டான்!

- இயேசுவானவர் நமது பாவங்கள் ''யாவற்றையும்'' சுமந்தார்!
கடந்தகால, நிகழ்கால, வருங்காலப் பாவங்கள்!
நீதிமானாக்கப்படுதல் = பாவமே செய்யாதது போல!
*''பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் ... உறைந்த மழை ...
பஞ்சு''* (ஏசா 1:18)

தேவன் நமது பாவங்களை என்ன செய்தார்?
நான்கு பரிமாண அன்பு (எபே 3:18,19) ...
அகலம் ... நீளம் ... ஆழம் ... உயரம்
— பாவங்களை விலக்கினார் ... *கிழக்கு ... மேற்கு* (சங் 103:12)
— பாவங்களைத் தூக்கியெறிந்தார் ... *முதுகுக்குப்பின்* (ஏசா 38:17)
— பாவங்களை அமிழ்த்தினார் ... *கடலாழத்தில்* (மீகா 7:19)
— பாவங்களை அகற்றினார் ... *மேகங்கள் போல்* (ஏசா 44:22)

மன்னிக்கப்பட்ட பாவங்கள் மறக்கப்பட்டாயிற்று!
பரிந்துபேசுபவர் x பழிசுமத்துபவன் (1 யோ 2:1; வெளி 12:10)

- நமது பொறுப்பு— ''கிறிஸ்து மன்னித்ததுபோல
பிறரை மன்னிக்கவேண்டும்!''

***2. நிச்சயத்தின் செய்தி*** (A Message of Assurance)

***''இன்று** என்னுடன் பரதீசில் இருப்பாய் என்று **மெய்யாகவே**
உனக்குச் சொல்லுகிறேன்''* (லூக் 23:43)

வலது பக்கமோ இடது பக்கமோ இருந்த ஒரு திருடன்
சரியான தீர்மானம் செய்தான்!

- எனது இரட்சிப்பைக் குறித்து நான் நிச்சயமாயிருக்கமுடியுமா?
  ஆம், ஆம், ஆயிரம் முறை ஆம்!
  எ.கா.) *''மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்கு உட்பட்டிருக்கிறோம் என்று **அறிந்திருக்கிறோம்**''* (1 யோ 3:14)
  அப்படி நம்புகிறோம், எண்ணுகிறோம் என்றல்ல;
  அப்படி ''அறிந்திருக்கிறோம்!''
  கிறிஸ்துவோடு இணைவது திருமண இணைப்பு போன்றது.
  வாசியுங்கள்: (1 யோ 5:10-13) ... *''கொண்டிருக்கிறான் ... இருக்கிறது''*
- அப்படியானால், நிச்சயம் சாத்தியமா என்று கேட்கப்படுவதேன்?
  இரட்சிப்பை முக்காலத்தில் புரிந்துகொள்ளத் தவறுவதாலேயே —
  கடந்த கால இரட்சிப்பு — பாவத்தின் *தண்டனையிலிருந்து* விடுதலை
  நிகழ்கால இரட்சிப்பு — பாவத்தின் *வல்லமையிலிருந்து* விடுதலை
  வருங்கால இரட்சிப்பு — பாவத்தின் *பிரசன்னத்திலிருந்தே* விடுதலை
  அதாவது, நீதிமானாக்கப்படுதல் (குறிப்பிட்ட சமயம்);
  பரிசுத்தமாக்கப்படுதல் (நெடுகவே நடப்பது);
  மகிமைப்படுத்தப்படுதல் (குறிப்பிட்ட சமயம்)
- சாட்சிகள்: (1 யோ 5:7) —
  *பிதாவானவர்* (யோ 1:12)
  *வார்த்தை* (பைபிள் சொல்கிறது; விசுவாசிக்கிறேன்; அவ்வளவுதான்)
  *ஆவியானவர்* (ரோ 8:16)
  சத்தங்கள், தரிசனங்கள், சொப்பனங்கள் இவைகளையெல்லாம் நாடி நிற்கவேண்டாம்.
  முதலாவது, சத்தியம் (Fact) — அடுத்து, விசுவாசம் (Faith) — கடைசியாக, உணர்வுகள் (Feelings)

### *3. **குடும்பத்திற்குச் செய்தி*** (A Message for the Family)

*''மாதுவே, அதோ, உன் மகன் ... சீடனை நோக்கி: அதோ, உன் தாய்''* (யோ 19:26,27)

குடும்பங்களைக் குறித்து தேவனது கரிசனை இங்கு தெளிவு.
குடும்பம் — படைப்பில் அடிப்படையானது.
— இரட்சிப்பிலும் அப்படியே.



எ.கா.)
- நோவாவும் குடும்பமும் — பெருவெள்ளம்
  (நீதிமானாய் இருந்தவன்)
- ராகாபும் குடும்பமும் — நியாயத்தீர்ப்பு
  (துன்மார்க்கமாய் வாழ்ந்தவள்)
- சகேயுவும் குடும்பமும்
- பிலிப்பி நகர் சிறையதிகாரி —
  *''இரட்சிக்கப்பட நான் என்ன செய்யவேண்டும்?''* (அப் 16:30)
  *''நீயும் **(அத்துடன்)** உன் வீட்டாரும்''* (வச 31)

- இயேசுவின் போதனை: *''வீட்டிற்குள் நுழைகையில், சமாதானம் கூறுங்கள்''* (லூக் 10:5,6)
  *சமாதானத்திற்குத் தகுதியானவன் இருந்தால் ...*
  சமையலறை சரியான திசையில் இருந்தால் என்றல்ல!
  (வாஸ்து!)
- புதிய உடன்படிக்கையில் பரம்பரைப் பாவம் கிடையாது —
  எரே 31:29-31 (Generational sin)
- ஒவ்வொருவரும் தனக்குத்தானே பொறுப்பு —
  யோ 1:12 ... *பிள்ளைகள்,* பேரப்பிள்ளைகளல்ல!
  கிறிஸ்தவ இல்லம், இந்து இல்லம், இஸ்லாமிய இல்லம்
  எங்கு பிறந்திருந்தாலும் **மறுபடி** பிறக்கவேண்டும்!
- பெற்றோரது பொறுப்பு —
  — தந்தையர்க்குக் கூடுதல் பொறுப்பு (நீதி 1:8)
  எ.கா.) ஆபிரகாம் (ஆதி 18:19)
  சொத்துக்கள், நகைகள், சேமிப்பு ... இவையல்ல.

### *4. **தெய்வீக உறவின் செய்தி*** (A Message of Fellowship)

*''என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?''* (மத் 27:46)

— சிலுவையிலிருந்து வந்த நடுக் கதறல்.

- *''நமது பாவங்கள் ... பிரிவினை ... முகத்தை மறைக்கின்றன''* (ஏசா 59:2)

அவ்விதமே, நம்மனைவரது அனைத்துப் பாவங்களும் இயேசுவின் மீது வந்தபோது, பாவத்தைப் பார்க்கமாட்டாத சுத்தக் கண்ணராகிய பிதாவானவர் தமது முகத்தை மறைத்தார்.

அறுபடாத நெருக்கவுறவை நாம் தேவனோடு
அனுபவிப்பதற்காக கிறிஸ்து கைவிடப்பட்டார்.

■ கிறிஸ்துவின் உடல் பிய்க்கப்பட்டபோது —

அ) நடுவிலிருந்த பிரிவினைச் சுவர் தகர்க்கப்பட்டது —

எபே 2:12-14 ... யூதர் vs. யூதரல்லாதோர்
இனி இனவெறி, இடவெறி கிடையாது.
**ஒரே** இரத்தத்தால் கழுவல்; **ஒரே** இரத்தத்திலிருந்து தோற்றம் (அப் 17:26).
இனி அன்னியரல்ல, *''உடன் குடிமக்கள்''* (எபே 2:19)

ஆ) தேவாலயத் திரைச்சீலை மேலிருந்து கீழ் வரை கிழிந்தது —

அதைத் திரும்பத் தைக்கக்கூடாது!
— இனிச் சடங்காச்சாரம் கிடையாது!
எபி 10:19-22 ... *மகா பரிசுத்தத் தலத்திற்கு வழி*
— இனிப் புனிதத் தலங்கள் கிடையாது (மறுரூப மலை)
— இனி இயேசுவைத் தவிர நடுவர் தேவையில்லை!
(1 தீமோ 2:5; எபி 8:6)

இ) இனி உணர்ச்சிவசப் பரவசங்கள் கிடையாது —

திருப்பிரசன்னத்தை **உணருகிறீர்களோ** இல்லையோ —
*இம்மானுவேல்* (= தேவன் நம்மோடு)
ஜான் வெஸ்லி:
''தேவன் நம்மோடிருக்கிறார்; அதுதான் காரியம்!''

இரட்சிப்பின் அனுபவமானது தேவனோடு ஐக்கியம் கொள்ள ஆழ்ந்த விருப்பத்தை நம்மில் உருவாக்குகிறது —
திருவசனத் தியானம் & ஜெபம்.
வேறெதுவும் அவ்வளவு முக்கியமல்ல.
மார்ட்டின் லூத்தர்: ''கிறிஸ்து இருந்தால் சிறையும் சிம்மாசனம்;
கிறிஸ்து இல்லையேல் சிம்மாசனமும் சிறைதான்!''



## *5. திருப்தியின் செய்தி* (A Message of Satisfaction)

*''தாகமாயிருக்கிறேன்''* (யோ 19:28)

- *''திறந்த ஊற்றாய்''* மாறும்படி இயேசு நமக்காய்க் காயப்பட்டார் (சக 13:1)

மேய்ப்பன் அடிக்கப்பட்டார். ஆனால் அவர் ஆடுகளை விட்டு ஓடவில்லை; அவற்றை இன்னும் *அமர்ந்த தண்ணீர்களருகே* நடத்திச் செல்கிறார் (சக 13:7/ சங் 23)

தண்ணீர் மட்டுமல்ல, நமக்குள்ளேயே *ஊற்று* (யோ 4:14)

- மனிதன் நாடிச் செல்லும் மாற்றுக்கள் —

அ) பணம் —

*''எல்லாத் தீங்குக்கும் வேர் ... அநேக வேதனைகள்''*
(1 தீமோ 6:9,10)
பணக்காரன் நன்கு சாப்பிடுவான்; ஏழை நன்கு தூங்குவான்!
தேவனை அறியாதோர்: *''எதை உண்போம் ... குடிப்போம்?''*
*''நீங்களோ முதலாவது இறையரசைத் தேடுங்கள்''*

ஆ) பாலியலின்பம் —

குறிப்பாக வாலிபர்
திரைப்படங்கள் / காதல் / ஆபாசப் படங்கள் / இன்டர்நெட்
உனது வாழ்வை வீணடிக்காதே.
*''உன்னைப் படைத்தவரை வாலிபத்தில் நினை''* (பிர 12:1)

இ) சாதனைகள்/வேலை/ —

நமது தொழிலையே தொழுவது! (பிர 2:4-6,10,11)
ஒரு விண்வெளி வீரர்:
''சந்திரனில் நடந்துவிட்டேன்; அடுத்து?''

இவையெல்லாம் *வெடிப்புள்ள தொட்டிகள்* (எரே 2:13).
தூயாவியானவரும் திருச்சபையும் (விசுவாசிகள்) சேர்ந்து அழைப்பு: *''தண்ணீர்களருகே வாருங்கள்''* (வெளி 22:17)

அந்தப் பழம்பெரும் சிலுவைக்கு
உலக இன்பங்களும் செல்வங்களும் நிகராகுமோ?

சிலுவையே கடவுளது **கூட்டல்** அடையாளம்!

## *6. முற்றுப்பெற்றதின் செய்தி* (A Message of Finished Work)

*''முடிந்தது''* (யோ 19:30)

கிறிஸ்துவின் பிராயச்சித்த பலியினால் பரிசுத்த தேவனது அனைத்து நிபந்தனைகளும் நிறைவேற்றப்பட்டன. எதையும் அதனுடன் கூட்டக்கூடாது.

- இரட்சிப்பு ஓர் இலவச ஈவு!

எபே 2:8-10 ... *உங்களால் உண்டானதல்ல ...*

தேவனைப் பொருத்தவரை: எல்லாம் கிருபையினாலேயே.
நம்மைப் பொருத்தவரை: எல்லாம் விசுவாசத்தினாலேயே.

*''விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்!''*

(ஆப 2:4; ரோ 1:17; கலா 3:11; எபி 10:38)

— இதுவே மார்ட்டின் லூத்தரின் முழக்கம்

''செய்'' என்பதல்ல, ''செய்தாயிற்று'' என்பதே!

- நற்செயல்களினால் அல்ல —

அ) ஞானஸ்நானம் (குழந்தை/வயது வந்தோர்)
ஆ) சபையில் அங்கம் — ஒரு சபையும் இரட்சிக்காது.
இ) தானதர்மம்

*''நமது நீதி யாவும் அழுக்கான கந்தைதான்''*

கிறிஸ்து தரும் ஆடை VS. நமது கந்தை (ஏசா 64:6)

எ.கா.) பரிசேயன் VS. வரிக்காரன் (லூக் 18)

- கலாத்திய விசுவாசிகள்

*''கிருபையிலிருந்து விழுந்தார்கள்''* (கலா 5:4)
*அவர்களில் கிறிஸ்து மறுபடியும் ''உருவாகணும்''* (4:19)

நியாயப்பிரமாணம் VS. கிருபை: இஸ்மவேல் VS. ஈசாக்கு

அவனுக்குக் காம்பவுண்டுக்குள்ளேயே இடமில்லை.

**பாடுங்கள்:** *சிலுவையண்டையில் நம்பி வந்து நிற்கையில்,*
*பாவப் பாரம் நீங்கி வாழ்வடைந்தேன்;*
*எந்த நேரமும் எனதுள்ளத்திலும்*
*பேரானந்தம் பொங்கிப் பாடுவேன்.*



கிறிஸ்தவம் VS. மற்ற மார்க்கங்கள் —

நற்செயல்களுக்காக✓ VS. நற்செயல்களினால்✗ (எபே 2:9,10)

இலவச ஈவு VS. சம்பாதித்த பரிசு

## *7. பாதுகாப்பின் செய்தி* (A Message of Security)

*''பிதாவே, உமது கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்''* (லூக் 23:46)

- உங்கள் வாழ்வைக் கிறிஸ்துவிடம் ஒப்படைத்துவிட்டால், நாளையைக் குறித்துக் கவலைப்படத் தேவையில்லை —

கிறிஸ்து — நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்.
கிறிஸ்து — இருந்தவர், இருப்பவர், இனிவருபவர்.
கிறிஸ்து — அகரமும் னகரமும்: துவக்குகிறவர், முடிக்கிறவர்.

''இரட்டைப்'' பாதுகாப்பு — கிறிஸ்துவின் கரங்களில்

பிதாவின் கரங்களில் (யோ 10:28,29)

பன்னிருவரில் ஒருவன்தான் கெட்டுப்போனான்!

- பவுல்: *நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னாரென்று அறிவேன் ... ஒப்புக்கொடுத்ததை அந்நாள்வரை காப்பார்* (2 தீமோ 1:12)
- சிலுவையிலறையப்பட தமது உடலை ஒப்புக்கொடுத்த கிறிஸ்து இப்பொழுது தமது ஆவியை ஒப்படைக்கிறார்!

**பாடுங்கள்:** *''இயேசுவுக்கே ஒப்புவித்தேன்!'' (All to Jesus I surrender)*

■ அர்ப்பணிக்க ஓர் அழைப்பு —

தந்தையாம் தேவனிடம் வாருங்கள்:
அவர் உங்களை ***மன்னிப்பார்.***
அவர் உங்களுக்கு ***நிச்சயமளிப்பார்.***
அவர் உங்கள் ***குடும்பத்தை*** இரட்சிப்பார்
அவரோடு நீங்கள் ***தெய்வீக உறவு*** கொள்ளலாம்.
அவர் உங்கள் வாஞ்சைகளைத் ***திருப்திபண்ணுவார்.***
கிறிஸ்துவின் ***முடிக்கப்பெற்ற இரட்சிப்பை*** அனுபவிப்பீர்கள்.
நீங்கள் என்றும் ***பாதுகாப்பாய்*** இருப்பீர்கள்.

**இன்றே** இரட்சிப்பின் நாள்!